## சாதாரண கூட்டம்

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு** மே **மாதம் 29ம் நாள்** வெள்ளிக்கிழமை **மாலை 03.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

| மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| | **பொருள் எண்** 1<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஏப்ரல் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:-717**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண்** 2<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஏப்ரல் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:-718**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண்** 3<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 U 0518 (டம்பர் பிளேசர்) என்ற வாகனத்திற்கு 31.03.2020 உடன் சாலைவரி முடிவடைந்துவிட்டது. மற்றும் அவ்வாகனத்திற்கு இன்சூரன்ஸ் 20.06.2020 உடன் முடிவடைகிறது. எனவே மேற்படி சாலை வரி ரூ.3800/-மோட்டார் வாகன ஆய்வாளர் தகுதி II என்ற பெயரில் வரைவோலையாகவும், காப்பீடு தொகை ரூ.33,230/-ஐ நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், லெட்சுமாங்குடி என்ற நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டும். மேற்படி தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 329/2018/எச்1) | **தீர்மானம் எண்:-719**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண்** 4<br>பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN 50 AY 2779 (மினி டிப்பர் லாரி) வாகனத்திற்கு 31.03.2020 உடன் சாலை வரி முடிவடைந்துவிட்டது. எனவே மேற்படி சாலை வரி ரூ.3800/-ஐ மோட்டார் வாகன ஆய்வாளர் தகுதி II என்ற பெயரில் ON-LINE ல் செலுத்துவதற்கு மேற்படி தொகையினை காசோலையாக வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் .(ந.க.எண். 319/2018/எச்1) | **தீர்மானம் எண்:-720**<br>**அனுமதிக்கப்பட்டது** |

**பொருள் எண் 5**

இந்நகராட்சிக்குட்பட்ட மின் மோட்டார்கள், வால்வுகள், மின்சாதன பொருட்கள் மராமத்து செய்யும் பணிக்கு 20.05.2020 தேதி அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பகவதி ஏஜென்சீஸ் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 595445 | 594795 | 0.11 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.வி எழில்மாறன் ஒப்பந்ததாரர் கொரடாச்சேரி ரோடு | 595445 | 595830 | 0.06 % மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் ஒப்பந்ததாரர் மன்னார்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.11% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 426/2020இ1)

**தீர்மானம் எண்:-721**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 6**

இந்நகராட்சியில் வரி விதிப்புதாரர்களிடமிருந்து 2019-2020 ஆம் ஆண்டுக்கான முதல் மற்றும் இரண்டாம் அரையாண்டுக்கான சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, காலிமனைவரி மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு தொகை செலுத்த கோரி இந்நகராட்சி வாகனத்தில் மைக்செட் மூலம் விளம்பரம் செய்வதற்கு வாடகை பேட்டரி எடுக்கப்பட்டது. (சேட் & கோ, நௌஃபல் & ஹஃபீஸ் ஆடியோ, கூத்தாநல்லூர்) உள்ளூர் பேட்டரி நிறுவனத்திடமிருந்து வாடகை பேட்டரி எடுக்கப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. அந்நிறுவனத்திற்கு அதற்கான பட்டியல் தொகை **ரூ.28,600/-(ரூபாய் இருபத்து எட்டாயிரத்து அறநூறு மட்டும்)** வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2097/2016/அ1)

**தீர்மானம் எண்:-722**
**அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 7**

இந்நகராட்சி கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கு 28.05.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று நிறுவனங்களிடமிருந்து கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விபரம் | ஒரு பொருளின் விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி | முகக்கவசம் | 15 |
| | | கைகவசம் | 150 |
| | | ஒளிரும் சட்டை | 200 |
| | | கபசுர குடிநீர் | 1500 |
| 2 | ஆர்.எஸ்.ஏ. டிரேடர்ஸ் | முகக்கவசம் | 17 |
| | | கைகவசம் | 170 |
| | | ஒளிரும் சட்டை | 250 |
| | | கபசுர குடிநீர் | 1550 |
| 3 | கமலா டிரேடர்ஸ் | முகக்கவசம் | 20 |
| | | கைகவசம் | 180 |
| | | ஒளிரும் சட்டை | 280 |
| | | கபசுர குடிநீர் | 1600 |

அலுவலக குறிப்பு

1. வரப்பெற்ற மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1-ல் உள்ள நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினமான ரூ.1,70,000/-க்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் ஏற்கலாம்.
3. பொது நிதியில் செலவினத்தை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 0335/2020/எச்1)

**தீர்மானம் எண்:-723**
**அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்காக 23 பணியாளர்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நிறுவனத்துடன் உரிமக் காலம் எதிர்வரும் 30.06.2020 உடன் முடிவடைவதால் தொடர்ந்து 01.07.2020 முதல் 30.06.2021 வரை ஒரு வருட காலத்திற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளுக்காக 23 டெங்கு தடுப்பு பணியாளர்களை நியமித்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 17.09.2018ந் தேதிய கடித ந.க.எண். 13433/2018/ஜெ1ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கவும், எதிர்வரும் ஜீன் 2020 முதல் மழைக்காலமாக இருப்பதாலும், பொது சுகாதாரத்தை பாதுகாக்கவும், 23 பணியாளர்களுக்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலை விகிதத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் 12 மாத காலத்திற்கு பணியாளர்களை ஒப்பந்தம் செய்யவும், அதற்காக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினமான ரூ.34,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 484/2020/எச்1) | **தீர்மானம் எண்:-724**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக ஏற்கனவே 52 பணியாளர்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. அதன் உரிமக்காலம் எதிர்வரும் 30.06.2020 உடன் மேற்படி ஒப்பந்தம் முடிவடைவதால் தொடர்ந்து 01.07.2020 முதல் 30.06.2021 வரை திடக்கழிவு மேலாண்மை பணிகளான தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 100 சதவிகிதம் அனைத்து வீடுகளிலும் சேகரமாகும் கழிவுகளை தரம் பிரித்து வாஙகும் பணியில் ஈடுபடுத்தவும், சமுதாய உரக்கிடஙகுகள் அமைத்து உரம் தயாரிக்கும் பணிகள், உரக்கிடஙகில் உரம் தயாரிக்கும் பணிகள், மற்றும் பொது சுகாதார பணிகள் போன்ற முக்கியமான பணிகளை மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 16.08.2017ந் தேதிய செயல்முறை உத்தரவு ந.க.எண். 16469/பி2/2017ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின்படி மொத்தம் 52 துப்புரவு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விலை விகிதத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் 12 மாத காலத்திற்கு பணியாளர்களை ஒப்பந்தம் செய்யவும், அதற்காக தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினமான ரூ.79,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 483/2020/எச்1) | **தீர்மானம் எண்:-725**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்** 10<br>இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் பணிக்கான ஒப்பந்தபுள்ளி ஜீன் 2020 உடன் முடிவடைவதால் மேலும் ஒரு வருட காலத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. தற்பொழுது இந்தியா மார்க் II போர்வெல்லில் குடிநீரின் அளவு குறைந்து கொண்டே வருவதால் அதனை சீர் செய்யவும் நகராட்சி உட்பட்ட இரண்டு நீர்தேக்க தொட்டிகளிலும் பணிகள் பார்த்திடவும் குழாய் பொருத்துனர் பணியிடம் தொடர்ந்து காலியாக உள்ளதாலும் குடிநீர் பணி அவசர அவசியம் கருதி பணிகள் தொடர்ந்து நடைபெற குடிநீர் பணிக்காக ஒப்பந்த அடிப்படையில் 7 பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருவாரூர் அவர்களின் ஊதிய விகிதம் ரூ.379.00X7 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு மொத்தம் ரூ.2653 x 29 நாட்கள் ஒரு மாதத்திற்கு ரூ.76937 ஆக கூடுதல் ஒரு வருட காலத்திற்கு ரூ.76937 X 12=9,23,244 (or) 9,60,000/- க்கு உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 496/2020/இ1) | **தீர்மானம் எண்:-726**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண்** 11<br>இந்நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்தில் இயங்கி வந்த கிரைண்டர் 2014 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு இயங்கி வந்தது. மேற்படி கிரைண்டர் அடிக்கடி பழுதாகி இயக்க முடியாத நிலையில் உள்ளதால், தற்பொழுது அம்மா உணவகம் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக தினசரி பொதுமக்களுக்கு இலவசமாக உணவு வழங்கப்படுவதால் அவசர அவசியம் கருதி உடனடியாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பொதுநிதியில் மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண். /2020/இ1) | **தீர்மானம் எண்:-727**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 12**<br>14வது மத்திய நிதி ஆணையம் 2019-2020ன் கீழ், 10 தார்சாலைப்பணிகள் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.01.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை திருவாரூர் செய்தி மக்கள் தொடர்புதுறை அலுவலக வெளியீட்டு ஆணை எண் 03/ஒப்பந்தபுள்ளி/விளம்பரம்/2020/நாள் 08.01.2020ன்படி தினமணி நாளிதழில் 09.01.2020 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.5,844/- தினமணி நாளிதழ்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்,<br>2. 14 நிதிக்குழு நிதியிலிருந்து வழங்கலாம்.<br>(ந.க.எண். 1067/2019/இ1) | **தீர்மானம் எண்:-728**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண் 13**<br>இந்நகராட்சி பொதுப்பிரிவில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனம் 3,20,000 கி.மீட்டருக்கு மேல் கடந்து வாகனம் இயக்கப்பட்டு விட்டதாலும், மேற்படி வாகனம் வாங்கப்பட்டு சுமார் 8 ஆண்டுகாலம் ஆகிவிட்டபடியாலும் மேற்படி வாகனத்தில் கீழ்கண்ட பழுதுகளை நீக்கம் செய்வது அவசியமாகிறது. | **தீர்மானம் எண்:-729**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| **வ.எண்** | **பழுதுகள் விபரம்** |
|---|---|
| 1 | நான்கு வீல் பிரேக் |
| 2 | நான்கு வீல் பேரிங் |
| 3 | கிளர்ச்சி பிளேட் |
| 4 | பேன் பில்டர் |
| 5 | சைலன்சர் லீக் |
| 6 | கிளர்ச்சி பெடல் |
| 7 | நான்கு டோர் பிட்டில் & லப்பர் |
| 8 | சஸ்பென்சர் |
| 9 | ஏர் கூலர் புதிதாக மாற்றுதல் |
| 10 | ரேடியேட்டர் ஆயில் மாற்றுதல் மற்றும் இதர பழுதுகள் |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற மஹேந்திரா & மஹேந்திரா நிறுவனத்தின் டீலரான திருச்சி சிவா ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனம், திருச்சி மூலமாக பழுதுகள் நீக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பொதுநிதியில் மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண். 420/2020/இ1) | |
| | **பொருள் எண் 14**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN 50 AY- 2779 மினி டிப்பர் லாரி என்ற வாகனத்திற்கு 16.06.2020 உடன் இன்சூரன்ஸ் முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு புதுப்பிப்பதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/.க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 319/2018/எச்1) | **தீர்மானம் எண்:-730**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **பொருள் எண் 15**<br>இந்நகராட்சியில் இரண்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட மற்றும் குளோரின் கலந்த குடிநீர் வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின்படி குடிநீர் பணி என்பதால் குளோரின் அளவு குறையாமல் வழங்கிடவும் தற்போது இருப்பு குறைவாக இருப்பதால் பழைய நகராட்சி மேல்நிலை தொட்டிற்கும் மேல்கொண்டாழி மேல் நிலை தொட்டிற்கும் குளோரின் நிரப்புவதற்கும் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.5,80,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண். 529/2020/இ1) | **தீர்மானம் எண்:-731**<br>**அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி